தென்னகம்

ஆசிரியர்: K.A. மதியழகன்

வெள்ளி	16 – 10 – 59	விலை 16 காசு

கொங்குநாட்டு தீரன் சின்னமலை

K.A. மதியழகன்

அந்தக் காலம்!

பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதி. அந்தக்காலம் பொற்காலமா, இருட்காலமா, என் சந்தேகம், வாழ்ந்தவருக்கும் எழவில்லை. வரலாற்று ஆசிரியனுக்கும் தோன்றவில்லை. நெடிய இரவா? அருணோதயத்தின் வைகறையா? நம்பிக்கை என்னும் வசந்தமா? நம்பிக்கையின்மை என்னும் மாரிக்காலமா? மூடநம்பிக்கையின் சகாப்தமா? அறிவின் தலைமுறையா? இந்த கேள்விகளுக்கு இடம் இல்லாத அளவிற்கு நாட்டின் நடைமுறை படம் தீட்டிக்காட்டியது. தென்றல் தவழும் தென்னகத்தில் புயல் புகுந்தது. நாடெங்கும் அல்லோல கல்லோலம், முகலாயமுடி மன்னர்களின் தகதகப்பும் ஜொலி ஜொலிப்பும் மங்க ஆரம்பித்தது. தென்னகத்தில் ஐதராபாத்நிஜாம் பெயரளவில்டில்லி பாதுஷாவின் பிரதிநிதி. ஆனால் அரண்மனைக்குள் குத்து வெட்டு, அவனுக்குக் கட்டுப்பட்டவன் ஆற்காடு நவாப். அவன் ஆட்சியின் கீழ் அடக்கம் தமிழ் மண், ஆனந்த அமளி மிசையில் லயித்திருந்தான் ஆற்காட்டான், அந்த சுகபோகத்திற்கு கடன்பெறவே நேரம் போதவில்லை. அரசுக் கடமை நினைவு எங்கே இருக்கப் போகிறது.

தஞ்சைத் தரணியோ. இமயத்தில் இலச்சினையும் எல்லையற்ற அலைகடலுக்கப்பால் புகழ்க்கொடியையும் பொறித்த ராஜராஜன், ராஜேந்திரன், குலோத்துங்கன், வழி முறை பட்டுப் போய், விஜய நகரப்பேரரசன் தளநாயகர்களின் கோட்டமாயும், மராட்டிய சர்தார்களின் சபா மண்டபமாயும் மாறியது. இரகுநாத நாயக்கன், விஜயராகவ நாயகன்–இப்படிப்பட்டபெயர்களை தஞ்சைமக்கள் உச்சரிக்க வேண்டியிருந்தது. சரபோஜி என்ற மன்னன் ஆண்டு ஒன்றுக்கு இவ்வளவு குத்தகை என்று பேசி அரசநிர்வாகத்தையே வாடகைக்கு விட்டான். வர்த்தகம் செய்ய வந்த வெள்ளையனுக்கு புதிய வேலைகள் துவங்கின...சென்னையிலும் தேவனும்பட்டிணத்திலும், புதுச்சேரியிலும் லண்டன்காரனும், பாரீஸ்காரனும் கூடாரம் அடித்தான். சில நாட்களில் கூடாரம் கோட்டையாக வளர்ந்தது. கப்பற் தளத்தில் நின்று கொண்டு இந்தியக்கரையைப் பார்த்த வெள்ளையன் நினைத்ததெல்லாம் “இங்கோர் பூபாகம் உண்டு. இதில் ரோம் நகர பீட்டர் தேவாலயத்தையும், வெனிஸ் நகர பீட்டர் ஆலயத்தையும் தோற்கடிக்கும் கோவில்கள் உண்டு. சிற்பியின் உளியால் அங்கே கல்லும் கவிதை சொல்லும். அந்த விக்ரகங்களுக்கு வைரமும், வைடூரியமும், கோமேதகமும், மரகதமும் இழைத்திருப்பார்கள். கலாப மயில் உண்டு. அதன் ஆயிரம் கண்களைப்பார்க்க நம் கண் போதாது. சந்தனக்காடு உண்டு. அங்கே சர்ப்பங்கள் உண்டு. அவை தீண்டினால் உடனே மரணம். காளிபனிப் படலத்தை நினைவூட்டும் மெல்லிய பட்டாடை அந்த மண்ணின் கைத்திறன். எனினும் மூட நம்பிக்கையென்னும் முடைநாற்றம் போகவில்லையாம். நரபலி இடுவார்களாம். மிருகங்களெல்லாம் வணங்கும் கடவுளராம், இறந்த கணவனுடன் மனைவியையும் தீக்குண்டத்தில் கொளுத்துவார்களாம். எது இருந்தால் நமக்கென்ன வாணிபம் நமது

(4-ம் பக்கம் பார்க்க)

தீர்ப்பு !

கலைமுகிலன்

'அவள், அழகின் சிகரம்! அசைந்தாடும் முல்லை! நாடறியா நன்முத்து! ஏடறியா இன் தமிழ் ஓவியம்! வானத்து வட்ட நிலா! வண்ணத்து உயிர்ப் பாவை! தவழ்ந்துவரும் தென்றல்! எண்ணத்தில் எழுச்சிதரும் வண்ணத்தமிழ்!'

இப்படித்தான் எண்ணி எண்ணி ஏக்கமுற்று, மலரைச் சுற்றிவரும் வண்டுகளைப்போல் அவளைச் சுற்றி வந்தனர், வாலிபவிளிம்பிலே விளையாடிக் கொண்டிருந்த இளைஞர்கள்.

இளைஞர்களின் இதயத்தை கடலலைபோல் ஓயாத ஓட்டத்திற்கும், இன்ப நினைவுகளுக்கும் எதிர்கால கற்பனைக் கனவுகளுக்கும் இலக்காக்கி விட்ட, அந்த வனிதை மட்டும் தன்னை நாடி ஓடி வந்து கொண்டிருந்த இளைஞர்களைப் பார்த்துக்கேலிப் புன்னகை புரிந்துவிட்டு, ஏது மறியாதவளைப்போல் வாழ்ந்த வள்தான்,

இளைஞர்களின் இதயத்திற்கு முன்னே, தன் இதயத்தைஇரும்பாக்கிக் கொண்டிருந்தவள் தான்.

சூழ்நிலையும், சந்தர்ப்பமும் தங்கள் சதிராட்டத்தைக் காட்டி. இன்று, குற்றவாளியென கூண்டிலே நிறுத்தியது அந்நங்கையை!

இருபது வயதிற்கும், இருபத்து இரண்டு வயதிற்கும் இடையே, தளிர்முல்லைக்கொடி போன்று, வாலிபத்தின் வனப்போடு, பார்த்தோரை ஈர்க்கின்ற எழிலை பெற்றுத் திகழ்ந்த அந்நங்கை குனிந்த தலை நிமிராது, கண்களிலிருந்து வரும் கட்டுக் கடங்காத கண்ணீரைச் சிந்தியவண்ணம், அச்சடித்தப் பதுமையென நின்று கொண்டிருந்தாள், குற்றவாளியென கூண்டிலே!

கருவண்டை யொத்த கருங் குழல்கள் நீண்ட கார்வானைப் போல் நிலையின்றி கன்னங்களில் உராய்ந்து கொண்டிருந்தன.

கன்னங்களில் புரண்டு கொண்டிருந்த நிலையற்ற கருங் குழல்களைப் போலவே, அவள் உள்ளமும் நிலையின்றி சிந்தனையென்னும் சிறகு கொண்டு பறக்கத் தொடங்கியது.

இதயத்திலிருந்தும் நெடுமூச் சொன்று வெளியேறியது! அம் மூச்சில்... நான் குற்றவாளியா? நான் தண்டனைபெறத் தக்கவளா? என்பன போன்ற வினாக்கள் ஒருபுறம் எழுந்தன!...

வறுமை யெனும் இரக்கமற்ற அரக்கனின் கோரப் பிடியில் சிக்கி, நோயெனும் கொலைகாரனிடம் கொடுமைகளைத் தாங்கிக் கொண்டு குற்றுயிராய் படுக்கையில் கிடக்கும் தன் தாயின் நிலை ஒருபுறமும் தோன்றி மறைந்தது.

மீண்டும்......கண்ணீர் காட்டாற்று வெள்ளமென குவளை விழிகளெனும் குளத்தினின்றும் தாரை தாரையாகக் கொட்டியது!

நீதி மன்றத்தில் அமர்ந்திருந்த வழக்கறிஞர்கள் அனைவரும், அந்நங்கையையே நோக்கிக் கொண்டிருந்தனர்.

"உன் பெயர்...?"

நீதிபதி கேட்டார்.

"அமுதா" என்றாள், குனிந்த தலை நிமிராமலே!

"உன்மீது சாட்டப்பட்டிருக்கும் குற்றத்தை நீ அறிவாயா?!'

"நன்றாக அறிவேன்!"

"அப்படியானால்... குற்றத்தை ஒப்புக்கொள்ளுகிறாய் அல்லவா"

"இல்லை. மறுக்கிறேன்!" நிமிர்ந்து நின்றாள்! கண்களில் கனல் தெறித்தது!

"என்ன!" வியப்போடுதான் கேட்டார், நீதிபதி!

"ஆம். நான். என்மீது சாட்டப்பட்டிருக்கும் குற்றத்தை மறுக்கிறேன்!" கடுமையாகவே பேசினாள்

"வேடிக்கையாக இருக்கிறது!" மீண்டும் ஏளனமாகதான் கேட்டார். நீதிபதி!

"ஏன் வேடிக்கையாக இருக்கிறது?" சுடுகின்ற துப்பாக்கியினின்றும் புறப்பட்ட வெடிகுண்டுபோல் வெளி வந்தது. கேள்வி!

நீதிபதியே ஒருகணம் திகைத்தார்! அமுதாவின் ஆவேசமான கேள்வியைக் கண்டும், அவள் அடைந்திருந்த ஆத்திரத்தைக் கண்டும்!

"கொலைகாரன் குருதி தோய்ந்த கட்டாரியுடன்பிடிபட்ட போதும். நான் குற்றவாளிஅல்ல என்பதைப்போல், நீ கையும் களவுமாகப் பிடிப்படடபோதும் உன் மீது சாட்டப் பட்டுள்ள குற்றத்தை இல்லையென்று மறுப்பது வேடிக்கையாக இருக்கிறது'

"கொலை செய்தவன் கட்டாரியை விட்டுச் செல்ல, அங்கு வந்த வழிப்போக்கன் கட்டாரியை கையில் எடுத்துக் கொண்டு 'கொலை! கொலை!" என்று கூவி அழைத்தபோது அவனைக் கொலைகாரனென்று குற்றம் சாட்டி...நீதி மன்றத்தில் நிறுத்தப் பட்டால்... கட்டாரியை கையில் வைத்திருந்த ஒரே காரணத்திற்காக அவன் குற்றவாளியாக முடியுமா? சட்டம்அதற்குத் துணைசெய்யுமா? நீதி அதை ஆமோதிக்குமா? நேர்மை அதை ஏற்குமா?

ஆவேசத்தோடு கேள்விக் கணைகளை தொடுத்துச் சென்று கொண்டிருந்த அமுதா, திடீரென்று விக்கி விக்கி அழ ஆரம்பித்தாள்!

நீதிபதியின் சிந்தனை சிறகடித்துப் பறந்தது! சிந்தனையை அறுத்துவிட்டு கேட்டார். "நீ" இதற்குமேல் அவரால் கேட்க முடியவில்லை.

"நிரபராதி!..." என்றாள் விம்மலுக்கிடையே!

"நிரூபிக்க முடியுமா உன்னால்...?"

"நான் அதை நிரூபிக்கவேண்டுமானால் ...... எங்கள் குடும்ப வாழ்க்கைதான் அதற்குத் துணை செய்யும்"

"சுருக்கமாகக் கூறி முடி!"

"நீதிபதி அவர்களே! என் சொந்த ஊர் செய்யாமங்கலம் சுமார் மூன்றாண்டுகளுக்கு முன்னே...நானும், எனது தந்தையும் தாயும் அங்கேதான் வாழ்ந்து வந்தோம்.

"அந்த ஊர் மிட்டாதார் மாணிக்கம் என்பவரிடம்தான் என் தந்தை பண்ணைவேலைகளைச் செய்து வந்தார். அந்த வேலையின் காரணமாகக் கிடைத்த வருவாயைக் கொண்டு அரைப்பட்டியோடு காலத்தைக் கடத்திக் கொண்டிருந்தோம்!

"ஆம், மிட்டாதாரின் பண்ணையாள் என்ற பெயர்தான் பெரிதாகத் தெரியுமேதவிர, மிட்டாதாரின் பண்ணையாள் பட்டினி

(7-ம் பக்கம் பார்க்க)

காங்கிரஸ் ஆட்சியில்

விலைவாசி ஏறுது விஷம்போல!
வீராப்புப் பேசிகிறார் மேடைமேலே!!

	1956	1957	1958	1959
அரிசி மூட்டை	ரூ. 36	ரூ. 45	ரூ. 47	ரூ. 52
து. பருப்பு மூட்டை	32	37	44	61
சர்க்கரை ,,	90	95	105	115
மிளகாய் ,,	60	70	72	77
புளி ,,	112	115	130	214
நல்லெண்ணெய்வீசை	2-2-0	2-5-0	2-11-0	2-13-0

அடுக்குமா இந்த அநியாயம்?

பொறுக்குமா ஏழை நெஞ்சம்?

மலர் 1] [இதழ் 39

புண்ணுக்கு — புனுகு பூசுகிறார்!

அச்சமும் அவநம்பிக்கையும்தான் புரட்சியின் வித்துக்கள். தங்களின் உரிமைகள் பறிக்கப்படும்போது மக்கள் அச்சப்படுகிறார்கள்; ஆள்வோர்மீது அவநம்பிக்கையும் பிறக்கிறது. புயலும் நெருப்பும் ஒன்றாக இணைந்தால் உருவாகும் விளைவுகளே, அப்போது உண்டாகிறது, இதுதான் மனித வரலாறு போதிக்கும் கசப்பானபாடம்.

இந்திய அரசியல் சட்டம் என்பது, டில்லி தயாரித்த அடிமைச்சாசனம் என்பது நாட்டிலுள்ள முற்போக்குச்சக்திகள்அனைத்தினுடைய ஒருமித்த முடிவாகும். இதில் துளியேனும் எவர்க்கும் கருத்து வேறுபாடு கிடையாது, அன்றே தங்களின் எதிர்ப்புக் குரலை மிகத் தெளிவாகச் சுட்டிக் காட்டியுள்ளனர், அரசியல்சட்டத்தை வகுத்தவர்கள் இந்தியத்துணைக்கண்டத்தின் அரசியல் முறை 'கூட்டரசு முறை'யினைத்தான் பின்பற்றும் என்று அறிவித்தார்கள் என்றாலும், நடைமுறையில் அவை அனைத்தும் வெறும் சொற்கூட்டங்கள் என்பதனையே அனுபவங்கள் போதிக்கின்றன.

இந்திய அரசியல்சட்டத்தில் மாநில சர்க்கார்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகா[illegible]ங்கள் மிகவும் குறுகியவை, தன்னிச்சையாக[illegible]யும் செய்ய முடியாத அளவு அதன் கரங்கள் கட்டப்பட்டுள்ளன,

கூட்டாட்சி முறையினை ஏற்றுக்கொண்டுள்ள உலகிலுள்ளமற்றநாட்டு அரசியல்சட்டங்களை எடுத்துப்பார்த்தால், எந்தளவு இந்தியமாநிலங்கள் அதிகாரங்களற்ற அமைப்புகளாக இருக்கின்றது என்ற உண்மை மிகத் தெளிவாகப் புலப்படும்,

அமெரிக்காபோன்ற 'கூட்டாட்சி' நாடுகளில் மாநிலங்களின் கவர்னர்களை மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்கிறார்கள். ஆனால் நமது நாட்டிலோ அதற்கு நேர்மாறான நிலைமைகளைக் காணுகின்றோம். மாநில சர்க்காரின் விருப்பு வெறுப்புகளை கணக்கிலெடுப்பதில்லை என்பது மட்டுமல்ல, ஜன விரோதப் போக்கையே பல நேரங்களில் நடைமுறையாகக் கொண்டிருக்கிறார்கள். இங்கு கவர்னர்களை மக்கள் தேர்ந்தெடுப்பதில்லை, அதுவுமல்லாமல் அவர்களை நியமிக்கும் அதிகாரங்களைக்கூட டில்லியிலுள்ள மத்திய சர்க்கார் தனது கரத்தில் வைத்திருக்கிறது, இன்னும் வெளிப்படையாகச் சொல்லப்போனால், மத்திய சர்க்காரின் வேவுகாரர்களின் பணியினைச் செய்யவே அந்தப் பதவி பயன்படுத்தப்படுகிறது, பத்து ஆண்டுகளில் நியமிக்கப்பட்ட கவர்னர்களின் பட்டியலை கூர்ந்து நோக்கினால் இதனை நாம் எளிதில் உணர முடியும். தேர்தலில் மக்களால் தோற்கடிக்கப்பட்ட பலருக்கு கவர்னர் பதவிகள் கொடுக்கப்பட்டுள்ளன: அதன் வாயிலாக ஜனநாயக மரபுக்கேகூட மாசு கற்பித்துவிட்டார்கள் என்று துணிந்து கூறலாம். அந்தக் களங்கச் செயல் ஜனநாயக வரலாற்றில் கருப்புப் புள்ளியாக நின்று, என்றும் டில்லியின் பழியினைத் தூற்றிக்கொண்டே தானிருக்கும். கடந்த வாரம் சென்னையில் பேசிய ஆந்திர முதலமைச்சர் சஞ்சீவி ரெட்டியின் பேச்சின் மூலம் உலகம் மத்திய சர்க்காரின் விருப்பங்களையும், தேவைகளையும் டில்லி எந்த அளவு புறக்கணிக்கிறது என்பதனைப் புரிந்து கொண்டது. அவரைத் தொடர்ந்தாற்போல ஞாயிறு அன்று மத்திய தொழில் மந்திரி மனுபாய் ஷா, அகமதாபாத்திலுள்ள அரசியல் விஞ்ஞானக் கழகத்தில் பேசிய பேச்சுக்கள், மேலும் நமக்கு நம்பிக்கையூட்டும் வகையில் அமைந்துள்ளது.

மத்திய சர்க்காரில் அதிகாரங்கள் குவிந்து கிடக்கின்றன, மாநில சர்க்கார்கள் பஞ்சாயத் போர்டு போன்ற நிலைமையில் உள்ளன. மக்கள் ஆட்சி பரவ இந்தநிலை பெரிதும் தடைக்கற்களாக உள்ளது. அதிகாரங்களை பரவலாக்கவேண்டும் - அப்போதுதான் மாநிலங்கள் சரிசமமான வளர்ச்சியினைப் பெறமுடியும். ஏற்றத் தாழ்வற்ற போக்கும், சலிப்புணர்வும் ஏற்படாது - என்று நாம் பலமுறை எடுத்துக்கூறி, மாநில சர்க்கார்களின் உரிமைகளுக்காக வாதாடிய நேரத்தில் இகழ்ச்சி மொழி சிந்தியோருக்கெல்லாம், மத்திய அமைச்சர் மனுபாய் ஷா அவர்களின் அகமதாபாத்பேச்சு நிச்சயம் அதிர்ச்சியினைத்தான் அளிக்கும்; காலம் கடந்தாவது இந்த உண்மையினை ஷா போன்றவர்கள் ஏற்றுக்கொள்ளும் மனவளத்தை மற்ற கட்சித் தோழர்களும் பெற வேண்டுமென்பதுதான் நமது தணியாத விருப்பம்.

"மத்திய சர்க்காரிடம் அதிகாரங்களும், ஆதிக்கங்களும் மற்றும் அரசியல் நிர்வாக அலுவல்களும் குவியும் போக்கு கடந்த பத்து ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. இம்மாதிரி மத்திய அரசாங்கம் மொத்த அதிகாரத்தையும் வைத்துக்கொண்டிருப்பது நாட்டிற்கு கெடுதியையே விளைவிக்கும். இந்த நிலைமையால் மக்கள் நலனுக்கும், அரசாங்க நலனுக்கும் கெடுதியை விளைவிக்கும்" என்று மனுபாய் ஷா குறிப்பிட்டிருக்கும் வாசகங்கள், எந்த திசை நோக்கி டில்லி சென்றுகொண்டிருக்கிறது என்பதனைத்தான் நமக்குக்கோடிட்டுக் காட்டுகிறது.

"மத்திய சர்க்கார் ஒரு ஸ்டீம் ரோலர் ஆகிவருகிறது, இராஜ்யங்கள் பரிதவிக்கத்தக்க நிலையில் இருப்பதாகத் தெரிகிறது" என்று மேலும் எடுத்துக் காட்டுகிறார், அவரின் மணிமொழிகள் முழுக்க முழுக்க உண்மை என்பதனைத்தான் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட கேரள கம்யூனிஸ்ட் சர்க்கார் டில்லி தேவதையினால் நீக்கப்பட்ட சம்பவத்திலிருந்தே நாடு உணர்ந்துக்கொண்டிருக்கிறது. உலகில் எங்கும் நடைபெறாத அக்கிரமம். தேர்தல் மூலம் மிகப் பெரும்பான்மையினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆட்சி பீடத்தில் ஏறிய கட்சியினரை மாற்றுக் கட்சியினர் என்பதற்காக நீக்கிய கொடும் செயல் வேறு எந்த நாட்டிலும் கிடையாது, அந்த இரத்தக்கறை படிந்த அத்தியாயம் இந்தியத் துணைக்கண்ட வரலாற்றில் தான் காணுகின்றோம். டில்லியின் அத்துமீறிய அதிகாரக் குவியல்களின் விளைவாகத்தான் கேரள அரசிற்கு சாவுமணி அடிக்கப்பட்டது என்பதனை நேர்மை உள்ளம் கொண்ட எவரும் மறுக்கமாட்டார்கள். மத்திய சர்க்கார் என்ற ஸ்டீம் ரோலரினால் நசுக்கப்பட்ட எத்தனையோ பலிக்கடாக்களை நம்மால் காட்ட முடியும், அதன்முன் உதாரணம்தான் கலைக்கப்பட்ட கேரள கம்யூனிஸ்ட் சர்க்கார்.

உடலில் கண்டுள்ள நோய்க்கு காரணத்தைக்கண்டு பிடித்த மருத்துவர், அதனைப்போக்க அவர் காட்டும் வழிவகைகள், உண்மைக்கு புறம்பான மார்க்கமாகக் காணப்பட்டால் அவரின் மூல நோக்கத்தையே நாம்சந்தேகிப்போம். இதுதான் உலக இயல்பு. அந்த நிலைக்குதான் மத்திய தொழில் அமைச்சர் மனுபாய் ஷாவின் பின்பகுதிப் பேச்சு நம்மை இழுத்துச் செல்கிறது. டில்லியின் வாடை வீசினால்கூட இதே சுபாவங்கள்தான் உருவாகுமோ என்றுகூட சந்தேகம்கொள்ளவேண்டியுள்ளது. டில்லியில் குவிந்துள்ள எல்லையில்லா அதிகாரங்களையும், அதனால நாட்டுக்கும், மக்களுக்கும், மாநில சர்க்கார்களுக்கும் ஏற்படக்கூடிய கொடிய விளைவுகளை தெளிவாக விளக்கிய அவர், அவைகளைத்தடுத்து நிறுத்தும் மார்க்கங்கள் கூறும் நேரத்தில் பதவி மயக்கம் கண்ணை மறைக்க தவறான பரிகாரம் சுட்டிக்காட்டுகிறார். ஏதும் கூறாமல், நிலைமைகளை மட்டும் விளக்கிச் சென்றிருந்தால்கூட, நாட்டு மக்களிடம் நல்ல எண்ணத்தைப் பெற்றிருப்பார். ஆனால் அதனை தன் மொழியாலேயே இழந்துவிட்டார்.

டில்லியின் பிடியிலிருந்து மாநிலங்கள் பிரிந்துபோவது, குறைபாட்டை நீக்க நல்லபரிகாரமாகாது என்பது மத்திய தொழில்அமைச்சரின் வாதம்—புரையோடிப்போன புண்ணுக்கு புனுகுபூசி, வேதனையைக்குறைக்கவும் மறைக்கவும் முயலுகிறார் மத்திய சர்க்காரின் யதேச்சகாரப் போக்கினை உலகம் மிகவும் தெளிவாகப்புரிந்து கொண்டு, செயலாற்றத் துவங்கியிருக்கும் இவ் வேளையில், அவரின் பேச்சுக்கள் தனது உள்ளத்திற்கு வேண்டுமானால்ஒருவகையான திருப்தியினை அளிக்குமே தவிர பிரச்சனைக்குப் பரிகாரமாக அமையாது. பெரு வெள்ளத்தை கைம்மண் கொண்டு தடுத்து நிறுத்தும் முயற்சியாகவே அவரின் செயல்கள் அமையும். பொங்கிவரும் உரிமை உணர்வுகளை எந்தச் சக்தியாலும் தடுத்து நிறுத்தமுடியாது மத்திய - மாநில சர்க்காரின் உறவுநிலை ஆண்டான்-அடிமை நிலைபோல் உள்ளது, என்ற பேருண்மையை பலர் உணரத் தொடங்கி விட்டார்கள்; இருள் கப்பிய வானத்தில் அவ்வப்போது தோன்றும் ஒளிக் கீரல்கள் வழிகாட்டப் பயன்படா விட்டாலும். உருவங்களை உணர்ந்துக்கொள்ளவாவது பயன் படுவதுபோல், மத்திய தொழில்அமைச்சர் மனுபாய்ஷாவின் பேச்சுக்கள், நம்முடைய அடிப்படைப் பிரச்சனைகளுக்கு விடை காட்டா விட்டாலும், அதன்தேவைகளை வலியுறுத்துகிறது என்ற அளவிலாவது பயன்படும்.

"கொங்கு நாட்டு தீரன்சின்னமலை"

(முதல் பக்கத் தொடர்ச்சி)

நோக்கம். அவரது வழிபாட்டுமுறை குறித்து நமக்கென்ன" என்பதுதான்,

வெள்ளையன் வந்தான். துறைமுகத்தில் இறங்கினான், தென்னை மரங்களின் வரிசை தென்பட்டது. கிணற்றடியில் தவளைகளின் கூச்சல் கேட்டது. தெருக்களிலே கட்டை வண்டிகள் கடகடவென சக்கரங்களை சுழற்றிக்கொண்டு ஓடின. குதிரைக் குப்பதில் மாடுகள் வண்டியை இழுத்தன. யானைகள் துதிக்கையை அசைத்துக்கொண்டு பாதைகளிலே ஊர்ந்தன. கட்டிளங்குமரிகள், குளத்தங்கரையிலும், ஆற்றுப்படிகளிலும் குடங்களிலே தண்ணீர் மொண்டு தலையிலே வைத்து கைகளை வீசி, குடந்தில் நீர் தழும்ப, இதயத்திலே ஆசை தழும்ப ஒயிலாக நடந்து போகும் காட்சி ரம்மியமாகப் பட்டது.

ஆனால் அமைதியற்ற அரசியல் கண்களுக்குத்தெரிந்தது. வாய்ச்சொல் வீரர், வலி வில்லாதார், கோழைகள் என்ற முடிவுக்கு வந்தான். எண்ணத் தொலையாத பேதத்தைக் கண்டு சிரித்தான், இந்த உழைச்சேற்றை, ஏறாத ஆழத்தை கடந்து நம்மை எதிர்ப்பது எப்போது என்ற கர்வம் அவன் உள்ளத்தில் பாய்ந்தது.

நாட்டில் நல்லரசில்லை. அரசுக் கட்டிலுக்காக அமளி. தடியெடுத்தவன் தண்டல் நாயகமானான். கோலெடுத்தவன் குறுநில மன்னன் ஆனான். ஆற்காடு நவாப் பெயரளவில் மன்னன். ஆட்சித் திறம் பூஜ்யம்.

கள்ளிக்கோட்டையில் சாமோரின். கேரளக் கரையில் வேறு அரசு. தென்பாண்டி மண்டிலத்தில் நாயக்க வம்சம். அது எட்டாத இடங்களில் பல பாளையக்காரர்கள்.

மைசூர மண்டிலத்தில் கொய்சால பரம்பரையின் வீழ்ச்சிக்குப் பிறகு விஜயநகர தளகர்த்தர்கள் ஆட்சிபீடமேறினர். அவர்கள் வம்சமும் வலி விழந்து புதுநிலை உருவாகியது,

போருக்குக் கிளம்புமுன் நாள் நட்சத்திரம் கேட்டனர் ராஜாக்கள். தளபதியின் ராணுவ நுணக்கத்திற்கு இருந்ததைவிட சோதிடனின் ஆருடக் கணக்கிற்கு அதிக மதிப்பு இருந்தது.

போரென்றால் பரிவாரங்களுடன் மன்னர் முகாமிட்டனர். குழந்தை குட்டிகள், பெண்கள், பாடகர்கள், நடன மாதுக்கள் ஆகியவர் சகிதம் படை ஊர்ந்து செல்லும். பொட்டல் வெளியில் கூடாரங்கள் அடிக்கப்படும். சில மணி நேரம் கடைத்தெரு, நாட்டிய அரங்கு முதலியவைகளுடன் திருநகரமாகக் காட்சியளிக்கும். போரில் மன்னவன் ஆனை மீது அமர்ந்து கணை தொடுப்பான். மன்னனின் பாதுகாப்புக்காக அவனைப்போல் ஐந்தாறு ஆனைகளில் 'வேஷம்போட்ட மன்னர்கள் போர்கள் போர் புரிவார்கள். நாடகத்தில் 'இரட்டை வேடம்' போல் களத்திலேயும் உயிர் அவ்வளவு கரும்பாக இருந்தது. போர் புரியும் வீரர்களின் ஒரு கண் எப்போதும் ஆனைமீதுள்ள அரசன்மீது இருந்தது. ஆனைமீது ஆள் இல்லையென்றால் அந்த வினாடியேபோர் தோற்றுவிட்டது என்று பஞ்சாய் பறந்தனர். போர்க்களத்தில் யார் மாண்டார்கள், எவரின் கை, கால் ஒடிந்தது என்று எவரும் கவலைப்பட்டதில்லை. மன்னின் மாடி வீட்டில் பாடகியின் கிதம் மதுரமாக இருந்ததா. நடனமாது; அன்றைய நாட்டியத்தில் போர் புரியும் பார்த்திபனே!

என் பொன்னவர் மேனிக்குத்தான் இந்த சுடர் என்று கருதிவிடாதீர், என் புன்னகையின் ஜொலிப்பு அந்த மின்னலில் ஏது, தலைவனே! எனது விழி வீச்சிற்கு உங்கள் வாள் வீச்சு எம்மாத்திரம் என்ற பாவங்களுக்கு பதம் பிடித்தாளா என்பதிலேதான் இருந்தது.

தென்னகத்தின் அரசஉரிமை போராட்டங்களில், தங்களது ஆதிக்க உரிமைப் போராட்டம் தொக்கி யிருப்பதாக பிரஞ்சுக்காரனும் ஆங்கிலேயனும் மோப்பம் பிடித்தனர்.

'ஆற்காடு நவாப் முகமதலி உங்கள் செல்லப்பிள்ளை' என்றான் ஆங்கிலேயன்.

'இருந்தால் என்ன, சந்தாசாகிப் எங்கள் மணவாளன்' என்றான் பிரஞ்சுக்காரன்.

'நாசிர்ஜங்' – அவனுக்குத்தான் நைஜாமின் மணிமுடி, – வெள்ளையன் சொன்னான்.

'முஜபர்ஜங்'–அவனே பட்டத்துக்கு உரிமையாளன், பிரஞ்சுக்காரன் பிடிவாதம் பேசினான்.

நாடு வேட்டைக் காடாகியது. நாசத்தின் நர்த்தனம் எங்கும் தாண்டவமாடியது. பூவார் சோலை சூழ்ந்த பொன்னி நதித் தண்ணீர் வீரர்கள் கொட்டிய

தடியெடுத்தவன் தண்டல்நாயகம்!

குருதியில் செந்நிறமாக மாறி ஓடியது, பாலாற்று மணலின் வெண்மை நிறம், இரத்தக் கறை படிந்ததால் பாதிக்கப்பட்டு பழுப்பு வர்ணம் பெற்றது. செந்நெல்லும் கரும்பும் வண்ணத் தடாகங்களும் நிறைந்த தஞ்சைத் தரணியில் வயல்கள் வெடித்துக் கிடந்தன. வாய்க்கால்கள் வரண்டு கிடந்தன. வைக்[illegible]ல் போர்களு[illegible]னியக் களஞ்சியங்க[illegible] இடங்களில் சா[illegible]மலை குவிந்தது. பெருந்தீ பரவியது. அணைகள் உடைக்கப்பட்டன. உழவர்களின் கலப்பை தூங்கியது. ஊர்கள் கொளுத்தப்பட்டன. உயிரும் உடமையும் மிகவும் மலிவான பொருளாகக் கருதப்பட்டது. சட்டமும் அமைதியும் நாட்டிலிருந்து விடைபெற்று எங்கோ மேக மண்டலத்தில் ஒழிந்து கொண்டன. அந்த கொடுமையையும் கோரத்தையும் அது நாள்வரை தமிழகத்தில் எந்தக் கண்களும் பார்த்ததில்லை.

எந்த கம்பனும் அந்த அழிவின் திருவிளையாடலை கற்பனை செய்ததில்லை. "வெல்லும் சொல்" படைத்த எந்த வீரனும் அந்த வேதனையைச் சொல்லும் முயற்சியில் தோல்வியையே தழுவி யிருப்பான்,

மாடு கன்றுகள் இறந்தன. வீடு, வாசல் இழந்தவர்கள் வேற்றிடம் ஓடினர். அவர்களில் பலர் குதிரைகளின் குழம்படியில் சிக்கி மாண்டனர், பலர்ஈட்டிக்கு பலியாயினர். மகனை இழந்த மாதா, கணவனை இழந்த காரிகை தங்கையை பறி கொடுத்ததமையன், தாயைப் பிரிந்தமகள், இப்படி நாதியற்றவர்களாக கோவெனக் கதறி நின்றனர். தீயுக்கும் தீயவரின் வாளுக்கு தப்பியவர் பஞ்சம் பட்டினிஎன்னும் கொடியவனின் கோரப்பற்களுக்கு இரையாயினர். சோழநாடு சோறுடைத்து என்று யாராவது [illegible] பரிதாபத்திற்குரியவர்களிடம் சொல்லியிருந்தால் சொன்னவனை சும்மா விட்டிருக்க மாட்டார்கள். எதிரிக்கு உணவு கிடைக்குமோ என்பதற்கு தானியங்களையே அழித்து விட்டனர். நாட்டில் உழவுத் தொழில் நடைபெறவில்லை. நல்லவர் கொடுத்த கஞ்சி எத்தனை நாளைக்கு வரும். தஞ்சைத் திருநகரில் நாளொன்றுக்கு எழுபது, எண்பது பேர் உணவில்லாததால் பிணமாயினர். நெற் களஞ்சியத்தில் ஏற்பட்ட இந்த நெருக்கடிகண்டு எந்த அரண்மனையும் நெஞ்சு கொதிக்கவில்லை. பலமாதங்கள் ஆண்டுகள் சென்னையிலிருந்து தஞ்சை வரையுள்ள நெடுஞ்சாலைகளில் மனித வாடையே வீசவில்லை. நாலுகால் பிரயாணிகள்கூட தென்படவில்லை. நெடுஞ்சாலையில் அர்த்தராத்திரியில் அட்டிகையைத் திருடியவன் பகல் வேளையில் அங்காடித் தெருவில் விலை கூறி நின்றான். தங்கச் சங்கலிக்காக குழந்தையின் கழுத்தை நெரித்தவன் தண்டனையின்றி ஊரிலே உலவினான். கொலைகாரன், கொள்ளைக்காரன் இவர்களின் கொற்றம் நடைபெற்றது.

"நாடாளுகிறார்களாம் நாடு, உதவாக்கரைகள்" என்றனர் கொஞ்சம் கோபக்காரர்கள்.

"நம்மால் ஆகுமா" என்ற பெருமூச்சு விட்டனர் சிலர்.

தன்னம்பிக்கை யில்லாதவர்கள்–கோழைகள்.

சரிதம் திரும்புகிறது!

★

அமெரிக்காவை – கொலம்பஸ் கண்டுபிடிக்கவில்லை.

★

பதினைந்தாம் நூற்றாண்டில்தான் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த கொலம்பசின் தலைமையில் அமெரிக்கா கண்டத்தை ஸ்பெயின் நாட்டு கடற்பயணக்காரர்கள் கண்டுபிடித்தார்கள் என்று வரலாற்று ஏட்டில் படிக்கிறோம். ஆனால் அது தவறு என்று, சமீபத்தில் உஸ்பெக் அகாடமியைச் சார்ந்த வரலாற்று ஆசிரியர் ஒருவர் கூறியிள்ளார், இச்சேதி எங்கும் பரபரப்பை யூட்டியுள்ளது. ஸ்பெயின் மண்ணை விட்டு நீங்குவதற்கு முன்பே, கொலம்பசிற்கு மேற்கத்திய பகுதிகளிலுள்ள நாடுகள் பற்றிய முழு விபரமும் தெரியுமாம். தக்க ஆதாரங்களையும் தன்னிடத்தே வைத்திருந்தாராம். இவைகளையெல்லாம் கொலம்பஸ் ஸ்பெயின் கடற்பயணக்காரர்களிடமிருந்து பெற்றிருந்திருக்கிறார்.

இந்த உண்மையினை சோவியத் வரலாற்றாசிரியர் நீண்டநாள் ஆராய்ச்சிக்குப் பின்புதான் கண்டுபிடித்துள்ளார். ஸ்பெயின் நாட்டு ராணி இசபெல்லாவிற்கு கொலம்பஸ் தீட்டிய மடல்தான் ஆசிரியரின் கூற்றுக்கு அடிப்படையாகத் திகழ்கிறது. கொலம்பஸ் தீட்டிய மடல் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள நாடுகள் பற்றியும், அங்கு காணக்கிடக்கும் வளங்கள் பற்றியும் மிகத் தெளிவாக படம் பிடித்துக் காட்டுகிறதாம்.

கோலெடுத்தவன் குறுநில மன்னன்!

''எப்படி முடியும் எதிரியின் ஆற்றலின் முனபு'' – இப்படி ஆருடம் கூறினர் சிலர். கையாலாகதவர் – சுயநலக்காரர்கள்.

'' முடியும்மா, முடியாதா என்பதல்ல. தேவையா, தேவையில்லையா, இந்த அக்ரமம் தவிடு பொடியாக வேண்டுமா, எத்தனை நாள் அதிகாரத்திற்கு பணிவது – இப்படி குரல் எழுந்தது.

அந்தக் குரல் – விடுதலை வீரரின் முழக்கம். எந்த நாட்டுக்கும் தேவையானது.

ஒரு திசையிலே இல்லை. திருநெல்வேடிச் சீமையிலேயிருந்துவந்தது. கொங்கு நாட்டு மண்ணிலேயிருந்து எதிரொலித்தது. அது தெளிவாகக் கேட்க சில நாட்கள் பிடித்தன.

மைசூர் மண்டலத்திலேயிருந்து ஓர் சூருவளி கிளம்பியது. அந்த காற்றில் வெள்ளையருக்கு இங்கு என்ன வேலை? வியாபாரிகள் வேந்தர் உரிமை கொண்டாடுகின்றனரா? என்ற கேள்வி எதிரொலித்தது.

'' எங்கிருந்து வந்தான்? எப்படி பெற முடிந்தது இவனல் இந்த ஆற்றலை'' என்று எவரும் திகைப்படைந்தனர்,

அணிதேர் புரவி ஐயாயிரத்துடன் சென்னையை நோக்கி ஆங்கிலேயரை எதிர்த்து ஒருவன் கிளம்பினன். படித்தறியாதவன். ஆனல் உலகப்போர் வீரர்களில் எவரிடமும் அவன் கற்றிருந்த ராணுவக் கலையில்லை ... ஹைதர் அலி எனும் ... ன் மைசூர் மணிமகுடத்தை சூட்டிக்கொண்டான். அவனது ஆற்றல் முன் தென்னகம் மதயாதை செலுத்த காத்துநின்றது.

திண்டுக்கல் கோட்டைக்கு காவல் நின்ருன் இந்த காளை. மராட்டியரை மருட்சி கொள்ளச் செய்தான் என்று பலரும் பேசினர்.

ஆங்கிலேயருக்கு எதிராக முதன் முதல் போர்க்கொடி உயர்த்தினன். அவன் குதிரைகள் எழுப்பிய புழுதி தமிழகத்தையே மறைத்தது. செங்கம் கண்வாயைத் தாண்டி திருவண்ணமலையில் ஆங்கிலப் படையை முற்றுகையிட்டான்.

ஆம்பூர் களத்தில் அவனது அசகாய சூரத்தனம் வெளிப்பட்டது. சென்னை எல்லையிலேயே நுழைந்தான். பரங்கிமலையில் இருந்த ஐதரிடம் ஆங்கிலேயர் சமரசம்பேசினர்.

சின்னட்களில் ஆர்காடை முற்றுகையிட்டான். தோல்வி முகம் கண்ட ஆங்கில தளபதி மன்ரே, தனது காலாட் படையை காஞ்சிபுரம் குளத்தில் மூழ்கடித்துவிட்டு வெருங்கையோடு சென்னை வந்தான். தெருவீலுள்ளோரெல்லாம் கைகொட்டிச் சிரித்தனர்.

ஆர்காடு முற்றுகையில் வெற்றி கிட்டியது. நாட்டு மக்கள் வெள்ளையன் ஒழிவான் என்று ஐதரை வரவேற்றனர். சில ஆண்டுகள் உருண்டோடின.

கலிங்கத்துப் பரணியில் கேள்விப் படுகிறேமே, அதுபோல், கல்கத்தா நகரிலிருந்த ஹேஸ்டிங்ஸ், சர் அயர்கூட் எனும் தளகர்த்தனை கடல் மாக்கமாகவும், வேருேர் தளபதியை தரை மார்க்கமாயும் அனுப்பினன்.

வந்தவாசியில் போர்க்களம் அமைந்தது. சின்னட்களில்சிதம்பரத்தைத் தாக்கினன். தில்லைக் கோவில் ஐதரின் ஆயுதக் கிடங்காக அமைந்தது. அந்த ராணுவ தளத்தை ஆங்கிலேயனல் அசைக்க முடியவில்லை. ஆனல் அதனைத் தொடர்ந்த பரங்கிப் பேட்டைப் போரில் ஐதர் பின் வாங்க நேரிட்டது.

பின்னர் பழவேற்காடு, புள்ளலூர், சோழிங்கபுரம் ஆகிய இடங்களில் கடும் போர் நடைபெற்றது. ஐதர் அழிந்து விடுவானே என்ப் பலர் அஞ்சினர்.

ஆனல் ஐதர் அவனது எல்லையை விரித்தான். கடலூரை கைப்பற்றினன் ஆங்கிலேயரிடம் சிக்கிய நாகபட்டினத்தை விடுவிக்க உதவி புரிந்தான்.

ஐதரின் திருநாமத்தை லண்டனும் பாரிசும் உச்சரித்தன. ஐரோப்பிய மண்டிலம் அவன் பெயரைக் கேட்டு நடு நடுங்கியது. வடக்கே, வெள்ளையரை எதிர்த்து சிப்பாய்க் கலகம்என்ற பெயரிலே எதிர்ப்புக் கொடி உயர்த்துவதற்கு எழுபத்து ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு போர்க்கோலம் பூண்ட ஐதர், கொடியவன் ஒருவனின் வஞ்சக் எண்ணத்தால், அவனது இலட்சியம் நிறைவேறுவதற்கு முன்பு கொலை செய்யப்பட்டான்.

அவன் மைந்தன் திப்பு மைசூர் 'அரியணை ஏறினன். தந்தையின் அடிச்சுவட்டை பின்பற்றி ஆங்கிலேயருக்கு ஓர் அபாய அறிவிப்பு ஆனன்.

கோவை சேலம் வட்டங்கள் மைசூர் மண்டிலத்தில் அந்த நேரம்அடங்கியிருந்தன. கொங்கு நாட்டு காடுகரைகளும், தோட்டம் துரவுகளும், உழைப்பில் திறமையான உழவர் பெரு மக்களால் செழித்துக் குலுங்கியது. சோளக் கொல்லையில் கதிர்கள் விட்டிருந்தன. பரண்மீது நின்று கவண்வீசி ஆலோலம் பாடினர், வேளாளக்குமரிகள். வெட்டுக் கிளிகள் விரண்டோடின. நாட்டுப் பயிரை அளிக்க புதிதாக வந்துள்ள வெட்டுக் கிளிகளை அவர்கள் ஆலோலத்தால் துரத்த முடியாது என்பதை அந்த பட்டிக்காட்டுப் பாவைகள் தெரிந்திருக்கவில்லை,

வேலியிலே ஒரு கடவு ஏற்பட்டால் தோட்டத்திற்கே ஆபத்து என்பதை அறிந்திருந்தனர். வேலியே பயிரை மேய்ந்தால் வெள்ளாமையின் விளைவு என்னகும் என்ற பழமொழியை அடிக்கடி பரிமாறிக்கொண்டனர்.

தோட்டத்துச் சாளைகளிலே பூசனிக் கொடி படர்ந்திருந்தது. மார்கழித் திங்களில் மலர்ந்த பூசனி பூக்கள் நிறத்தில் பொன்னைப் போட்டிக்கு அழைத்தன. சாளைக் கூரையிலே நின்று சேவல் தினமும் வைகறையைக் கூவியது. கலப்பையுடன் காடு கரை சென்றனர் கட்டு மஸ்தான கொங்குநாட்டு இளைஞர். துளி காலடிச் சத்தம் கேட்டால் நாய் குரைத்தது. மாடுகளை பட்டியில் அடைக்குமுன் 'படல்' சரியாக இருக்கிறதா, இல்லாவிட்டால் ஓநாய் புகுந்து விடுமே என எச்சரிக்கையாய் இருந்தனர்,

ஆனைமலைக்காடுகளில் தேக்கு மரங்கள் ஓங்கி வளர்ந்திருந்தன. அதனை ரம்பம் கொண்டு தச்சர்கள் அறுத்தனர். ஆனைகள் தேக்கை அடிவாரத்திற்கு சேர்த்தன. அதுவே லண்டன் நகரம் போய் மேஜையாகி; அதன்மீது தங்களது அடிமைச் சாசனம் எழுதப்பட இருந்தது என்பது அதனை அறுத்த தச்சனுக்குச் தெரியாது. தமிழகத்தின் அல்லோலகல்லோலத்தின் சாயல் அவ்வளவாக அவர்களுக்குப் படவில்லை. கொங்கு நாடடுக் குடியானவன் மற்றவர்களை கவனிக்கவில்லை. அந்த நேரத்தில் காங்கேயத்திற்கும் ஈரோட்டிற்கும் இடையே உள்ள வட்டாரத்தில்...

தொடரும்

முகவரி மாற்றம்

★

''மன்றம்'' அச்சகம் கீழ்க்கண்ட முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளது.

''மன்றம்'' இதழுக்கு அனுப்பப்படும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியன புதிய முகவரிக்கு அனுப்பப்படவேண்டும்.

''மன்றம்''
49, வேளாளத் தெரு,
அமைந்தகரை,
சென்னை–29

ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு அனுப்பப்படும் தனிப்பட்ட கடிதங்கள்

இரா. நெடுஞ்செழியன்,
8, லட்சுமி டாக்கீஸ் தெரு,
சென்னை-20.

என்ற முகவரிக்கு அனுப்பவும்

அறியாமையா? அலட்சியமா?

★

காந்தியாருக்கு சீடர்கள் இழைத்த அநீதி!

அக்டோபர் இரண்டாம் நாள் மறைந்த உத்தமர் காந்தியாரின் பிறந்ததின விழாவை இமயம்முதல் குமரி வரை கோலாகலமாகக்கொண்டாடினர். அவரின் புகழ் எங்கும் ...டப்பட்டது. அவரின் சடலம் புதைக் ...ட்டுள்ள டில்லி ராஜ்கட்டில் பண்டிதநேரு, ராஷ்டி... ரா...ந்திரபிரசாத் போன்றவர்கள் நேரில் சென்றே அஞ்சலி செலுத்தினர்.

நம்மவர்கள் அவர்களுக்கு எந்த வகையில் இளைத்தவர்கள்; ஊரெங்கும் கூட்டம் கூட்டினர். காந்தியாரின் தொண்டையும் அவரது கொள்கைகளையும் எடுத்துக் கூற வேண்டியவர்கள், இடத்தை மறந்து கூட எதிர்கட்சியினர் மீதுவசை புராணம் பாடினர். கூடியிருந்த மக்களோ அவர்களின் விபரீதப் போக்குக் கண்டு எள்ளி நகையாடினர்.

கண்ணடி மாளிகைக் குள்ளிருந்து கொண்டு கல் எரியக்கூடாது என்பது பழமொழி—மாற்ருரின் மீது பழி சுமத்தும் முன் தங்கள் கரங்களிலுள்ள கறைகளைப் பார்க்க மறந்து விட்டனர்.

சிலைகள் அமைப்பது, அறநிலையங்கள் நிறுவது போன்ற காரியங்கள் மாண்டு மறைந்த உத்தமர்களை பசுமையாய் என்றும் நினை விற்கொள்ளத்தான்—ஏற்படுத்துவது என்பது கூட எளிது. பின்பு அதைச்சரிவரக் காப்பது என்பதுதான் மேலான காரியம்.

கடந்த ஏப்ரல்திங்கள் பண்டிதநேரு அவர்களால், ஐம்பதினயிரம் ரூபாய்க்கு மேல் செலவழிக் கப்பட்டு, ராய்சௌத்திரி என்ற வடநாட்டுச் சிற்பியால்உருவாக்கப் பட்ட உத்தமர் காந்தியாரின் உருவச்சிலை திறக்கப் பட்டது. அது இன்று எழில் கொழிக்கும் மெரினகடற்கரையில் நாதியற்று நிற்கிறது. அவர் பிறந்த நாளாம் அக்டோபர் இரண்டாம் நாளில்கூட அந்தச் சிலை தூய்மைபடுத்தப் படவில்லை–சிறு மாலைகூட அணிவித்து மரியாதை செய்யப்படவில்லை. அந்தளவிற்கு காந்தியாரின் சிலை அவர்களின் சீடர்களால் போற்றப் படுகிறது. சென்னையில் அதே மெரின கடற்கரையில் டாக்டர் அன்னி பெசண்ட் அம்மையாரின் உருவச்சிலை எவ்வளவு தூய்மையாக சம்பந்தப் பட்டவர்களால் பாதுகாக்கப் படுகிறது.

உத்தமர் காந்தியார் 'தங்களின் தனிச்சொத்து' என்று பாத்யதை கொண்டாடுவதில் மட்டும் சீடர்களுக்குப் பெருமையில்லை, அதுபோல் செயலும்அமைய வேண்டும்,

ஸேக்ஸ்பியரைப் பற்றி சில உண்மைகள்

★ 16-ம் நூற்றண்டில் பிறந்த புகழ்மிக்க ஆங்கிலக் கவிஞர் பலர் எண்ணுவதுபோல அவர் ஒரு மகான் அல்ல. சாதாரண மனிதர் தான். மகான்கள் புவியில் அவதரித்நால் வானத்தில் வால் நட்சத்திரம் தோன்றுமாம். ஸேக்ஸ்பியர் பிறந்த போது எந்தவித புதுச் சம்பவங்களும் நிகழவில்லை, இராஜ மாளிகையல்ல அவர் தவழ்ந்தது சாதாரண மண் குடிசைதான்!

★ அவர் வாழ்ந்த போது சமகால ஆசிரியர்கள் எங்கும் ஸேக்ஸ்பியரைப் பற்றி குறிப்பிடவில்லை என்பது சிலரின் வாதம், அது தவறு. ஸேக்ஸ்பியரைப் பற்றிக் குறிப்பிட்டுள்ள 16-ம் நூற்றுண்டில் வெளிவந்துள்ள நூல்கள் ஆங்கில மொழியில் எண்ணற்றவை உண்டு!

★ வியப்பாகத்தோன்றலாம். ஆனல் இதுதான் உண்மை. தன்னுடைய நாடகங்கள்எதிலும் தன் காலத்து கவிஞர்களையோ, ஆசிரியர்களையோ, மன்னரையோ ராணியையோ, வீரர்களையோ, அரசியல்வாதிகளையோ எவரையும் ஸேக்ஸ்பியர் நேரடியாக குறிப்பிடவில்லை.

★ ஸேக்ஸ்பியர் தோன்றிய நேரம் மறுமலர்ச்சி மனித சமுதாயத்தில் பிறந்த சமயம். அமெரிக்கா என்ற புதிய பூபாகமே அந்த நேரத்தில் தான் கண்டுபிடிக்கப் பட்டது.

★ எழுத்தாளர்கள் அனைவரும் புகழ் பெற்ற மேதைகளின் ஏடுகளை வழிகாட்டியாகக் கொள்வதுதான் உலக வாடிக்கை – இதற்கு ஸேக்ஸ்பியர் மட்டும் விதிவிலக்கல்ல. ஒரு எழுத்தாளர் பாராட்டே அல்லது பழியோ பெருவது. மற்ற அசிரியர்களின் எண்ணங்களை எந்த முறையில் பயன் படுத்தினர் என்பதைப் பொறுத்துத்தான் அமையும். கிடைத்த செங்கற்களை அடித்தனத்திற்கு பயன் படுத்துவோரும் உண்டு. மாளிகைக்கே உபயோகிப்போரும் உண்டு–ஸேக்ஸ்பியர் மற்ற ஆசிரியர்களிடமிருந்துகிடைத்த கருத்துக்களை அடித்தளமாக அமைத்து தன் சொந்த ஆற்றலால் சாகாதஇலக்கியங்களைச் சமைத்தார். எனவேதான் காலாத்தால் அழிய ாதகவிஞராக விளங்க முடிகிறது.

இலக்கியச் சந்தையிலே

ஆலோலம் பாடும் ஆரணங்கு

குறிஞ்சியின் வளங்களெல்லாம் கூத்தாடும் மலைச்சாரல்! அங்கோர்பால் அழகான தினைக் கொல்லை! ஆலோலம் பாடிக் குருவி ஓப்பியும், கிளி கடிந்தும் நிற்கின்றனர் ஆரணங்கிருவர், சித்திரம் போன்ற சீரிளமேனியர் இருவருக்கும் தினைக் கொல்லையிலே காவல் வேலை! அழகென்றெ சொல்லே அகராதி ஏறியது அவளால்தான்! அவ்வள அழகையும் அங்கமேற்றுக்கொண்ட அவள்தான்தலைவி. மற்றொருத்தி அவள் தோழி!

அருவி நழுவி வரும் மலைச் சாரற் பகுதியில் குருவியோட்டும் அந்தத் தலைவியின் நெஞ்சைக் கவர்ந்து சென்று விட்டான் காளை ஒருவன்! பருவமுகில் குளிர் காற்றல் உருவு திரிந்து மழையாவது போலக் காளையின் அன்பால் கவரப்பட்ட தலைவியும் நிலைமாறி நின்றுள். காதல் தனது விந்தை விளையாட்டை நடத்திக்காட்ட அவள் சிந்தையை இடமாக்கிக் கொண்டது!

முன்பெல்லாம் தாண்டித் திரியும் மான்போலப் பூண்ட சிலம்பும், பொன்னணியும் குலுங்கத் திரிவாள் அவள்! சுற்றித் சுற்றித் தினைக்கொல்லையைக் காவல் காத்து வந்தாள், இப்போதோ மனக்கொல்லையில், விரட்டினுலும் போகாத காதல் மாட்டை மேய விட்டு அமர்ந்திருக்கின்றுள்! கன்னத்தைத் தாங்கிய கையோடும், கண்ணீரை ஏந்திய விழியோடும் கவலையோடு கல்மீது அமர்ந்திருக்கின்றுள். காரணம், உள்ளத்தை மெழுகாக ஓட்டச் செய்யும் காதல் தீ பற்றிவிட்டதுதான்! எண்ணி உருகும் அவள் இதயத்தைக் கண்கள் கண்ணீராக மாற்றிக் கன்னத்தில் வழிய விட்டன:

காதல் என்பது மலர்மொட்டு; அது கட்டவிழும்போது திருமணம் என்ற மாலையில் தொடுக்கப் பறிக்கப்பட்டுவிட வேண்டும். இன்றேல் கருகி அழிவது தான் அதற்கு முடிவு! இஃது இயற்கையோடொத்த பொது நியதி!

காதலால் கட்டுண்டு தவிக்கும் தலைவியின் நிலைமைதோழிக்குத் தெரியாமலா போய்விடும்? அவளுக்கும் தெரியும். பால் வேறுபாடின்றி மனிதகுலத்தைப் பருவத்திலே பற்றிக்கொள்ளும் பரம்பரை நோய் காதல்! இது தலைவிக்கு மட்டும் விதிவிலக்கல்ல என்பதைஅறிவாள் தோழி காதலால் காவல் மறந்து நிற்கும் தலைவியைத்தேற்றும் மொழியோடு போதனையும் புரிகிருள்! உயிர்போன உடலுக்கு உபதேசம் செய்வதுபோலத் தன்னை மறந்து காதலனை எண்ணி உருகும் தலைவியிடம் கூறுகிருள். ஆடாது அசையாது காதல் எண்ணத்தில் மூழ்கி உள்ள தலைவியின் எண்ணத்தைப்பற்றி இழுக்கம் பக்குவமாகத் தோளைக் குலுக்கி, முகத்தைத் துடைத்துத் தலைவியிடம் கூறுகிருள்!

"தோழி! ஒருவரை ஒருவர் உடலாலும் பிரிய முடியாது பொருந்திய பெருங்காதல் கொண்டுள்ளாய் நீ! அதனுல் வரப்போகும் குறைபாட்டை நீ உணரவில்லை. இந் நிலையில் உள்ள நீ அதனை அறியமாட்டாய் என்பது உண்மை! ஆனுலும் நான் உரைக்கின்றேன் கேள்.

பாலொழுக்குப் போலப் பார்வைக்கித் தோன்றி வழிந்துவரும் அருவிநீர் இத்தினைக் கொல்லையின் வளர்ச்சிக்கு முன்பு பயன் பட்டது. இப்போது அந்நீர் தேவையில்லை. ஆம் பசிய தினையின் கதிர்களெல்லாம் முதிர்ந்து விட்டன. நம்மையும் இங்கே

புதுமதியன்

புள்ளோட்டிக்காவல் செய்யப் பெற்றேர் அனுப்பி உள்ளனர். ஆனுல் நீயோ, உன் நெஞ்சைக் காதலனிடம் தஞ்சம்புக விட்டு நிற்கிருய்! பலவகைப்பட்ட நன்மணம் கமழும் தேன்நிறைந்த மலர்மாலையை அணி... கொண்டுள்ளவனும் ... சொட்டத் தொங்கும் நாக் குடைய, விரைந்தோடும் நாய்கள் உடன்வரக் குன்று பல கடந்து வேட்டையாடும் வேட்டுவனுமான உன் காதலனை எய்திட எண்ணிக்கிடக்கின்றுய்!

தினைக்கொல்லையில் கூட்டாகச் சேர்ந்துவரும் குருவிக் கூட்டத்தையும், கிள்ளிப்பறக்கும் கிளிக் கூட்டத்தையும் ஓட்டாமல் உளம் தளர்ந்து உட்கார்ந்து கொண்டிருக்கிருய், அதனுல் தினைக் கொல்லையோ, கொய்யா முன்பே கொய்த காடுபோலத் தோற்றமளிக்கிறது. கிளியும், குருவியும் கொல்லையை அழித்து அவ்வாறு தோன்றச் செய்துள்ளன. கதிரற்ற தினந் தட்டைகளோ கதிர் கொய்தகாடு போல நிறையத் தெரிகின்றன.

முன்பெல்லாம் நீ காட்டு மலர்களால் தொடுத்த அழகிய மாலை உன் கழுத்தில் அசைய அடிக்கடி எழுந்து சென்று தினைக் கொல்லையைச் சுற்றி வருவாய். கிளிக் கூட்டத்தை ஓட்டும் ஓசையைப் பலமுறை எழுப்பி நிற்பாய். இப்போதோ அதையெல்லாம் மறந்து நிற்கிருய்! அதனுல் தினைக் கொல்லையோ புட்களால் அழிக்கப்பட்டுக் கொய்த காடு போல் தோன்றுகிறது, இனி நீ முன்போலக் கிளிகளை ஓட்டா விட்டால் என்ன நடக்கும் தெரியுமா?

நம்முடையதாய், இங்கே கதிரற்று நிற்கும் தினந்தட்டைகளைக் கண்டாளானுல், சிறிய கிளிக் கூட்டத்தை ஓட்டுவதற்குத் தெரியாதவள் என்று எண்ணுவாள், அதனுல் இத்தனைக்கொல்லையைக் காப்பதற்கு வேறு எவரையேனும் கொண்டுவந்து நிறுத்திவிடுவாள்! நம்மையும் இல்லத்தோடு வைத்து இறுகப் பூட்டிவிடுவாள்! அதனுல் உன்னுடைய அன்புக் காதலனை நீ காணவும் இயலாது. அவன் பரந்த மார்பு தவழுதற்கும் பெறுவதும் முடியாது! இதையெல் எண்ணிப் பார்த்து, கிளிகளை ஓட்டுவதுபோல ஆங்காங்குச் சென்று ஒலி எழுப்பி நின்று நீ நடிக்கவாவது வேண்டும்! இன்றேல் பெறுதற்கரிய உன் காதலரையே பெற முடியாமற் ...ம்!"

இவ்வாறு தோழி தலைவிக்குக் கூறும் இவ்வழகுக் காட்சியை வண்ணங்களில்லாமலே எண்ணங்களை உணர்த்தும் எழுத்துக் கூட்டங்களால் ஓவியம் தீட்டியுள்ளார் பண்டை நாட்புலவரும் அரசருமான பாண்டியன் அறிவுடை நம்பி!! அகச் சோலையில் இள்மணங் கூட்டும் பன்மலருள்ளே இந்தன் மலரும் ஒன்று! நீங்களும் நுகருங்கள் அதன் மணத்தை!

மெய்யில் தீரா மேவரு காமமொடு
எய்யா யாயினும் உரைப்பல் தோழூ!
கோய்யா முன்பும் குரல்வார்ப்பு தினையே
அருவி ஆன்ற பைங்கால் தோறும்
இருவீ தோன்றின பலவே, நீயே
முருகுமுரண் கொள்ளும் தேம்பாய் கண்ணிப்
பரியல் நாயொடு பன்மலைப் படரும்
வேட்டுவற் பெறலொடு அமைந்ததனை யாழநின்
பூக்கெழு தொடலை நுடங்க எழுந்தெழுந்து
கிள்ளித் தெள்விளி இடைஇடை பயிற்றி
ஆங்காங்கு எமுகாயாயின்' அன்னை
சிறுகிளி கடிதல் தேற்ருள் இவள்எனப்
பிறர்த்தந்து நிறுக்குவளாயின்
உறற்கு அரிதாகுமவன் மலர்ந்த மார்பே!

– அகம் – 29: குறிஞ்சி;

பொருள் விளக்கம்:– தீரா – நீங்காத, மேவரு – பொருந்திய எய்யாய் – அறியாய், வார்பு – முற்றி, இருவி – தட்டை, முருகு – மணம், பரியல் – விரைதலுள்ள, தொடலை – மாலை, நுடங்க – அசைய தெள் – தெளிந்த, விளிபயிற்சி – ஓசைஎழுப்பி, கடிதல் – ஓட்டுதல், தேற்ருள் – அறியாள், றவ்ற்கு – பெறுதற்கு

தீர்ப்பு....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கிடந்து பரிதவிப்பதையோ, படும்பாட்டையோ யாரும் அறிய மாட்டார்கள், அந்த அளவில் மானத் தோடுவாழ்ந்து வந்தோம்!... ஒருநாள்...!

"என் தந்தையை கொள்ளை நோய் அள்ளி அணைத்துக் கொண்டு சென்றது. பசியாலும், பட்டினியாலும் நாளும் நைந்துருகிக் கொண்டிருந்த என்தந்தை இறந்து போனார்.

"தந்தையின் வருமானத்தைக் கொண்டும் நிம்மதியாகவாழமுடியர்தவர்களாய் பரிதவித்த நாங்கள்...என் தந்தையை இழந்த பின் ... வாழ்வது ஏது? எங்கள் வாழ்வில் நிம்மதிதான் கிட்டுவதும் ஏது? அதுதான் எட்டாத நிலவாயிற்றே!

"வறுமை எங்களை விரட்ட வாழ்க்கை எங்களை வதைக்க பணம் எங்களை பயமுறுத்த, அச்சம் எங்களை ஆட்டிப் படைக்க ஆடிக் காற்றில் ஆலாய்ப் பறக்கும் இலவம் பஞ்சுபோல் ஆனது எங்கள் வாழ்க்கை!

"பிறந்த ஊரிலே இருந்து வாழ வழியின்றி வகையின்றி—வழியிருந்தும் வல்லூருகளின் வலை வீச்சினின்றும் தப்பித் தன் மானத்தோடு வாழ நினைத்து நாடு விட்டு நாடு செல்லும் நாடோடிக் கும்பலைப்போல் புறப்பட்டோம், நானும் என் தாயும்.

"வேலை கேட்ட இடமெல்லாம் 'இல்லை' என்ற பதிலும், வசைமொழிகளுந்தான் இசை போல் செவிகளிலே ஒலித்தன...!

"வாழ்க்கை என்னும் வண்ண மலர்ச் சோலையை நாடி ஓடி வந்தோம்; வறுமை என்னும் [illegible] நிலத்திலிருந்து. நடந்தோம்!... நடந்தோம்!! தமிழகத்தின் தலைநகரான சென்னை நோக்கி!!!...

சென்னையிலே...சிங்காரமாளிகைகளின் வானளாவி நிற்கும் காட்சிகளைக் கண்டோம்; வாழ்வு நாடி வந்தவர்களுக்கு வாழ்வளிக்கும் மனிதர்களை—மாளிகை வாசிகளைக் காணவில்லை! மீண்டும்...,மீண்டும்......வறுமை எங்களை வாட்டி வதைத்தது! வாடினோம்!

"அப்போதுதான் நீதிபதி ஒருவரின் இல்லத்தில் என்தாய்க்கு வேலை கிடைத்தது. மகிழ்ந்தோம்; கிடைத்த வருவாயைக் கொண்டு வயிற்றை நிரப்பி வந்தோம்.

"ஒரு நாள்......என் தாயை காரணமின்றி வேலையிலிருந்து நீக்கி விட்டார், அந்த நீதிபதி! ஊராரின் வழக்கிற்கெல்லாம் நீதி, நேர்மை, நியாயம், குற்றம். அநியாயம் என்று எடுத்துக் காட்டும் பதவியிலே பணிபுரியும் அந்த நல்லவர், என் தாயிடம் நீதியின்றி நடந்து கொண்டார்!

"வேலையை இழந்த என் தாய் கதறித் துடித்தும் பலனில்லை. நீதிபதியின் உள்ளம் கல்லாக இருந்தாலும் கரைந்திருக்கும்; இரும்பாக இருந்தாலும் இளகி இருக்கும்; ஆனால், அவர் உள்ளமோ எல்லாவற்றையும் கடந்த ஒன்று!

"வேலையை இழந்த என்தாய் [illegible]ப் படுக்கையாகி, [illegible] கோரப் பிடியிலே சிக்கிச் சீரழிந்து கொண்டிருந்தார்கள். அவர்களைக் காப்பாற்ற மருத்துவரை நாடிச் சென்றேன் கையில் காசில்லை, என்பதை அறிந்த அந்த மருத்துவரும் மறுத்து விட்டார். மருந்து கொடுக்க.

"உடைந்த உள்ளத்தோடு இரவு வீடு நோக்கி வந்து கொண்டிருந்தேன். அப்போது அங்கு வந்த போலீசார் என்னைக் கைது செய்து, குற்றவாளியாக்கிக் கூண்டிலே நிறுத்திவிட்டார்கள்!

"நீதிபதி அவர்களே! இது தான் நடந்தது! நீங்கள் நினைப்பதுபோல்......மங்கையர் குலத்திற்கு மாசு தேடி ஈனத் தொழில் புரிந்து ஊனத்தை வளர்க்க நினைத்திருந்தால்!...... உப்பரிகையிலே உலாவி பஞ்சணையிலே படுத்துறங்கி. பழரசபானத்திலே பல்துலக்கி, புன்முறுவல் பூத்துப் புவிமறந்து, புதியதோர் உலகு கண்டிருப்பேன்!...

"மானத்தைப் பெரிதென மதித்து, கற்பை காசுக்கு விற்க நினையாது வாழ்ந்தேன்...இன்று குற்றவாளியாக நிறுத்தப்பட்டிருக்கிறேன்...!

"நீதிபதி அவர்களே! தீர்ப்பு எப்படி இருந்தாலும் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால், ஆதரவற்று அனாதையாகி நோய்வாய்ப்பட்டிருக்கும் என் தாயைக் காண மட்டும் அனுமதி கொடுங்கள்!"

கண்களிலிருந்து பொலபொலவென கண்ணீர் கொட்டியது. வேதனை தாளாது விம்மி, விம்மி அழுதாள்!

'நீதான் கொலைகாரன்! நீதான் குற்றவாளி! நீதான் அமுதாவின் தாய்க்கு துரோகம் புரிந்தவன்! நீதான் தண்டனை பெற வேண்டும்! நீதான் தண்டனை பெற வேண்டும்!' இப்படி வார்த்தையெனும் வல்லீட்டிகள் நீதிபதியின் உள்ளத்தைத் துளைத்தன. கண்களிலிருந்து இரண்டு சொட்டுக் கண்ணீர் கீழே விழுந்தன. யாரும் அறியாமலே அதைத் துடைத்துக் கொண்டு, தீர்ப்பளிக்க குறிப்பேட்டை எடுத்தார்.

அமைதியாக இருந்த வழக்கு மன்றத்தை அலைக்கழித்தவண்ணம், "அக்கா! அக்கா! அக்கா!" என்று அலறிக்கொண்டு வந்தான், அமுதாவின் எதிர் வீட்டு பாலு.

"பாலு......அம்மாவிற்கு எப்படியடா இருக்கிறது?" ஆவலோடு, கேட்டு, வெட்கித் தலை குனிந்து நின்றாள்.

"அம்மா..."

"அம்மாவிற்கு எப்படி இருக்கிறது, பாலு?"

சீக்கிரம் சொல்"

"ஆமாம்...மா...!"

கண்ணீரையும் கலந்துதான். அதன் பொருளைப் புரிந்து கொண்டாள், அமுதா!

"அம்மா!!"

நீதிமன்றமே எதிரொலித்தது, அந்தக் குரல்! வெட்டி வீழ்த்தப் பட்ட பட்ட மரம்போல் வீழ்ந்தாள், அந்நங்கை!

வீழ்ந்தவள் எழவே இல்லை. வஞ்சகர் வாழ்வுலகினின்றும் விடுதலைப் பெற்று விட்டாள்! தான் "நிரபராதி" என்ற தீர்ப்பைக் கேட்பதற்கு முன்பே மடிந்து விட்டாள். ஆம், தீர்ப்பிற்கு முன் ... மரணத்தேவனை ஆரத்தழுவி விட்டாள், அந்த ஆரணங்கு!

'தொட்டிலிட்டு ஆராரோபாடி மகிழ்ந்து, சிந்தைகுளிர்ந்து; நிலவுகாட்டி, நல்ல முதாட்டித் தூங்கவைத்த தாயை – பத்து மாதம் படாதபாடு பட்டுப் பெற்றெடுத்துப் பேணி வளர்த்த தாயை காப்பாற்ற முடியாத நான் ஏன் வாழவேண்டும்? யாருக்காக இனி வாழவேண்டும்? பொல்லாத இவ்வுலகில்... இனி நல்லவளாக வாழ வழியேது? வழி ஏது?' என்றுதான் அவள் உள்ளம் நொந்து உயிர் விட்டிருப்பாள்!

★

தோல்வியால் – – துவளோம்!

– கெயிட்ஸ்கல்

([illegible] பக்கத் தொடர்ச்சி)

தோல்விகண்ட 'சூயஸ்' நெருக்கடியில், மாக்மில்லன் தலையிட்டு வெற்றி கண்டது முதல், உலகம் இவரின் ஆற்றலை உணரத் தொடங்கியது.

வல்லரசுகளின் உயர்ந்த உச்ச கட்ட மாநாடுகூட்டி, சர்வதேச நெருக்கடி நிலையைத் தளர்த்த வேண்டும் என்ற முயற்சியில் நடுநாயகமாக விளங்குகிறார். போற்றுதற்குரிய வகையில் அவரின் பங்கு அமைந்துள்ளது. இந்த ஆண்டின் துவக்கத்தில் மாஸ்கோ சென்று உச்சகட்ட மாநாட்டிற்கான பேச்சைத்துவக்கி, சமாதானத்தின்புதியபாதை வகுத்த பெருமை இவருக்குத்தான் சாரும். உலக சமாதானத்தின் மீதுள்ள ஆர்வமும், அதற்குரிய நடவடிக்கைகளும், இங்கிலாந்து நாட்டின் வளர்ந்துவரும் பொருளாதாரச் செழிப்பிலுள்ள அக்கறையும் மீண்டும் இவருக்குமணி முடியைத் தேடித்தந்துள்ளது. இவரின் வெற்றி உருவாகிவரும் சமாதான இயக்கத்தினை மேலும் பலப்படுத்தும் என்றே உலகின் முற்போக்கு எண்ணம் கொண்ட அனைவரும் கருதுகிறார்கள்.

எதிர்பாராத வகையில் தொழிற்கட்சியினர் தோல்வியைச் சந்தித்துள்ளனர். அவர்களின் வெற்றியை எந்தச்சக்தியும் தடுத்து நிறுத்த முடியாதென்று அவனியெங்கும் கூறி வந்தனர். தொழிற்க்கட்சி பிரமுகர் கெயிட்ஸ்கல்தான் முதலமைச்சர் என்று ஆருடம் கூட கணித்தனர். ஆனால் அத்தனை எண்ணங்களும்சுவையான கனவாக மாறிவிட்டன. கடந்த பொதுத் தேர்தலில் கன்சர்வேடிவ் கட்சியினர் 58 இடங்களைத்தான் பெற்றிருந்தனர். ஆனால் இன்றோ தலைகீழ் மாற்றம். இரண்டு மடங்கு அதிக இடங்களைக் கைப்பற்றி வெற்றி வகை சூடியுள்ளனர். அதிர்ச்சி தரத் தக்க இந்தத் தோல்விக்கு என்ன காரணம்என்று தொழிற் கட்சி ஆழ்ந்து பரிசீலித்துக் கொண்டுள்ளது. கட்சி யந்திரத்திலும், அதனைத் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடுத்திய வகையிலும், தோல்வி காணவில்லை என்பதை தொழிற்கட்சியின் உறுப்பினர்கள் அனைவரும்ஒருமித்து ஏற்றுக் கொள்கிறார்கள். ஆனால் தோல்விக்கு யார்தான் பொருப்பு? அதுதான் அனைவரின் உள்ளங்களையும் அலைக்கழித்துக் கொண்டிருக்கும் கேள்வி! கொள்கைப் போராட்டமாக வடிவம் பெறலாம் என்று பலர் யூகிக்கிறனர்; சோஷலிசம் தங்களின் வேலைத் திட்டங்களில் எந்த அளவு இடம் பெறுவது என்பதுகூட அடிப்படையாக அமையலாம். இது மீண்டும் புதை குழிக்குள் சென்ற வலதுசாரி, இடதுசாரி சச்சரவை கட்சிக்குள் நுழைக்கும்; ஆனால் தொழிற்கட்சித் தலைவர் கெயிட்ஸ்கல் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட நான்கு மணி நேரங்களுக்குப் பின் குறிப்பட்ட சில சொற்கள்நமது இதயங்களையெல்லாம் ஆழ்ந்து தொடுகின்றன. "மக்கள் தீர்ப்பு வழங்கிவிட்டனர். அதனை நாங்கள் உணர்வுபூர்வமாக ஏற்றுக்கொள்கிறோம். மீண்டும் போராடி எங்களுக்குரிய வெற்றியை நிச்சயம் அடைவோம்"—இந்தப் பெருந்தன்மையை வெகுசிலரிடத்தில் தான் காணமுடியும்–ஒவ்வொரு ஜனநாயகவாதிக்கும் இருக்க வேண்டிய தனிப்பண்பு. தோல்வியை ஒப்புக்கொள்வது, அதன் பின் வெற்றிக்காக மீண்டும்பாடுபடுவேன் என்று உறுதி கொள்வது எல்லோராலும் செய்யக் கூடிய காரியமல்ல!

இந்தத் தேர்தலில் மேலும் கவனத்தை ஈர்க்கும் மற்றுமொரு செய்தி கம்யூனிஸ்ட் கட்சியினரின் படு தோல்வியாகும் – பதினெட்டு உறுபினர்கள் கட்சியின் சார்பில் போட்டியிட்டனர். ஒருவரைத் தவிர, மற்றஅனைவரும் தங்களின் ஜாமீன் தொகையினை இழந்திருக்கின்றனர்.

இது கம்யூனிஸ்டுகளுக்கு பிரிட்டனிலுள்ள செல்வாக்கை பிரதிபலிக்கும் அளவுகோளாகும்.

–கே. ஏ. கிருஷ்ணசாமி,
பி. ஏ. (ஆனர்ஸ்)

பிரிட்டனில் தேர்தல் !

உலகத்தின் கவனத்தை ஈர்த்திருந்த பிரிட்டன்நாட்டுத் தேர்தல்கள் முடிவடைந்து விட்டன. எதிர்பாரத வகையில் கன்சர் வேடிவ்கட்சியினர் பெரும் பகுதியான இடங்களை கைப்பற்றியுள்ளனர். பிரிட்டிஷ் பார்லிமெண்டின் காமன்ஸ் சபையிலுள்ள 630இடங்களுக்கு தேர்தல்நடைபெற்றன. அதில்...

கனசர் வெடிவ்	—	366
தொழிற்கட்சி	—	258
லிபரல்கட்சி	—	6
கம்யூனிஸ்ட்கட்சி,	—	0

ஆகிய இடங்களைப் பெற்றுள்ளன.

தேர்தல் நடைபெறுவதற்கு முன்புவரை கன்சர் வேடிவ்கட்சியினர் மீண்டும் பதவியினைக் கைப்பற்றும் அளவு வெற்றிபெற மாட்டார்கள் என்றே பலரும் கருதினர். அந்த எண்ணத்திற்கு அடிப்படையும் காணப்பட்டது. சமீபத்தில் நடைபெற்ற உபதேர்தல்களிலும், மற்ற தேர்தல்களிலும் அவர்களின் செல்வாக்கு மறையும் அறிகுறிகள் தென்பட்டன. ஆனல் பலரையும் வியப்பில் ஆழ்த்தும் வகையில் கடந்த தேர்தலைவிட அதிக இடங்களையும், அதிக வாக்குகளையும் பெற்று, வெற்றிக் களிப்பில் ஈடுபட்டிருக்கிறது.

இங்கிலாந்து நாட்டின் வரலாற்றிலேயே கன்சர்வேடிவ் கட்சியின் வெற்றி புதுமையான சம்பவமாகும். ஒரு அரசியல் கட்சி மூன்றுமுறை தொடர்ந்து வெற்றிபெற்று ஆட்சியில் இருந்ததே கிடையாது. அந்த வகையில் இன்றைய வெற்றி தனிச் சிறப்பைப் பெற்றிருக்கிறது.

நம்முடைய நாட்டுத் தேர்தல்களுக்கும், ஜனநாயக உணர்வு செழிப்புடன் வளர்ந்துள்ள இங்கிலாந்து நாட்டுத் தேர்தலுக்கும் மகத்தான வேறுபாடு உண்டு. வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை அளிக்கப்பட்டிருக்கிறது—அதனை தங்களின் விருப்பம்போல் எவர்க்கும் வேண்டுமானாலும், அளிக்கலாம் என்றாலும் கோரிய பலன்கள் அதனல் விளைவதில்லை. நம்முடைய நாட்டு வாக்காளர்களின்முடிவை நிர்ணயிக்கும் சக்திகள், போட்டியிடும் அபேட்சகர்களின் தகுதிகளோ, திறமைகளோ, தொண்டோ அல்லது அவர்கள் சார்ந்திருக்கும் அரசியல் கட்சிகளின் கொள்கைகளோ அல்ல. ஏழ்மையும் அறியாமையும் நமது சமுதாயத்தைப் பிடித்திருக்கும் சாபக்கேடுகள் தோற்றத்திலும் பாகுமொழியிலும் மயங்கும் பல ஹீனமானபண்புநம்மவரிடத்தில் பெரும்பான்மையோரிட முண்டு. உலகில் எந்த நாட்டிலும் காண முடியாத வகையில் 'ஜாதி' எனும் தீயசக்தி வேறு தன்னுடைய பங்கைச் செலுத்தத் தவறுவதில்லை. எனவே, நம்மவரின் முடிவை நிர்ணயிப்பவை மேற்கண்ட தீய சக்திகள் என்பதை நாம் அனுபவத்தில் தெளிவாக உணர்கின்றோம்

பாராளுமன்றத்தின் "தாய்" என்று உலக ஜனநாயக நாடுளால்போற்றப்படும்இங்கிலாந்து நாட்டிலோ இதற்கு நேர்மாருன முறையினைக் காணுகின்றோம். தனக்கென ஒரு பெரும் பாரம்பரியத்தைக் கொண்டிருக்கும் நாடு அது; பல்வேறு சோதனைகளுக்குப்பின் தான் அந்நாட்டு மக்கள் 'வோட்டுரிமை' போன்ற உரிமைகளைப் பெற்றுள்ளனர். எனவே அதன் முக்கியத்துவத்தை மிகத் தெளிவாக உணர்வார்கள். எனவே நல்ல வகையில் பயன் படுத்துகிறார்கள். நம்முடைய நாட்டைப்போல், ஜாதிக்கோ, பணத்திற்கோ பயந்து தங்களின் உயிரினும் மேலான வாக்குக்களை நல்குவதில்லை — தங்களை ஆள்பவர்கள் மிகத் திறமையானவர்களாகவும், தூய்மையானவர்களாகவும் இருக்க வேண்டும் என்பதிலே மிக விழிப்புடனிருக்கிறார்கள். மக்கள் விழிப்புடனிருக்கிறார்கள் என்பது மட்டுமல்ல. நாடாள்பவர்கள் போட்டியிடும் அபேட்சகர்களுக்கு நல்ல வாய்ப்புகள் கொடுத்து, தங்களது கட்சியின் திட்டங்களை மக்கள் மன்றங்களில் எடுத்துச் சொல்ல வழிவகைகள் செய்து கொடுக்கின்றனர். இங்கு காணுகின்றோமே, ஏதோ ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சிக்கு மட்டும் எல்லா வகையான சர்க்கார் சாதனங்களும் பயன்படுத்தும் இழிநிலை, அது போன்றநிலை அங்கு கிடையாது. ஆள்வோர், எதிர்க்கட்சி என்ற வேறுபாடின்றி எல்லோருக்கும் சமவாய்ப்புகள் அளிக்கபபடுகின்றன.

கடந்த பொதுத் தேர்தலில் 'டெலிவிசன்' வாயிலாக கட்சிப் பிரசாரங்கள் நல்லவகையில் நடைபெற்றுள்ளன. டெலிவிசன் அதிகாரிகள் எந்தவகையிலும் கட்சிகளுக்கிடையே பாரபட்சமான போக்கு காட்டக் கூடாதென்பதற்காக, போட்டியிடும் கட்சிகள் அனைத்திற்கும் உரிய வாய்ப்புஅளித்து, எல்லாக் கட்சியின் திட்டங்களையும் ஒரு சேரக் கேட்கும் வாய்ப்பை மக்களுக்கு ஏற்படுததிக் கொடுத்துள்ளனர். ஜனநாயகப் போர்வையில் உலவும் மற்ற நாடுகளும் இந்தச் சீரிய பண்பாட்டைப் பின்பற்றினுல் மக்களாட்சி வெகு விரைவில் மலரும். ஆனல் நம்மவருக்கோ அவைகள் எல்லாம் கண்ணற்றவனுக்குக் கிடைக்கும் கதிரொளி போலல்லவா அமைந்துள்ளது.

கன்சர்வேடிவ்கட்சியின் அபரிமிதமான வெற்றிக்கு காரணங்கள்பலஉண்டு பலர்எண்ணுவது போல அவர்களுக்கு கிடைத்த வெற்றி, திடீரென்றுஒரே நாளில் தோன்றியதல்ல ! முக்கியமாக இரண்டு காரணங்களைக் கூறலாம். இங்கிலாந்து நாட்டில் தற்போது காணப்படும் பொருளாதாரச் செழிப்பு ஒருவகையில் கன்சர்வேடிவ் கட்சியினரின் வெற்றிக்கு அடிப்படையாய் அமைந்துள்ளது. வேறு எந்த நேரத்தையும்விட, இன்று அந்நாடு பொருளாதாரத் துறையில் சிறப்பாக உள்ளது. மேலும் தற்போதுள்ள வாழ்க்கைத்தரத்தையே இரண்டு மடங்காக்க முயலுவதாகவும், உருவாகும் செல்வத்தை சமுதாயத்திலுள்ள சகல பகுதியினரும் பெறத்தக்க வகையில் காரியங்கள் ஆற்றுவதாகவும் கூறினர் ஒரு வகையில் நாட்டு மக்களின் இதயங்களையெல்லாம் இவைகள் ஈர்த்திருக்கின்றன.

பிரதம மந்திரி ஹெரால்ட் மேக்மில்லனின் அயல் நாட்டுக் கொள்கையும் வெற்றிக் குறிய பல காரணங்களில் ஒன்ருகும். மிக நெருக்கடியான வேளையில் மேக்மில்லன் பிரதமர் பொருப்பை ஏற்றுக்கொண்டார். இவரைப் பற்றிப் பொதுவாக ஒரு கருத்து எல்லோரிடத்தும்உண்டு இவர் ஆற்றல் மிக்கவர், நல்லவர், நேர்மையானவர், என்ருலும் இவருக்கு முன்பு கன்சர்வேடிங் முதலமைச்சராயிருந்த ஸர் வின்சண்ட் சர்ச்சில், ஸர் அந்தோணி ஈடன் ஆகியோரை போல மக்களிடத்தில் ஒரு வகையான 'கவர்ச்சி'யில்லை என்பது தான். ஆனல் முன்னள் முதலமைச்சர் ஈடன் முயன்றும்

(7-ம் பக்கம் பார்க்க)

வருந்துகிறோம்

கம்பம் தோழர் எம். சிக்கந்தர் அவர்களின் தந்தையார் இயற்கையெய்தினர் என்ற சேதி கேட்டு வருந்துகிறோம். அன்னர் பிரிவால் வாடும் தோழர் சிக்கந்தருக்கும் குடும்பத்தாருக்கும் நமது இதயமுருகும் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அச்சிடுபவர் : கே. இராசாராம், பி.ஏ., கஸ்தூரி லித்தோ ஒர்க்ஸ், 34, சின்னத்தம்பி தெரு, சென்னை-1.
ஆசிரியரும், வெளியிடுபவரும் : கே. ஏ. மதியழகன், பி.ஏ., 126, மவுண்ட் ரோடு, சென்னை-6.